**<u>செய்தி வெளியீடு எண்.864</u>** **<u>நாள்.20.11.2009</u>**

**<u>புதுடில்லி, இந்திய–பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் "தமிழ்நாடு நாள் விழா" 22.11.2009 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.</u>**

புதுடில்லி, பிரகதி மைதானத்தில் நடைபெறும் இந்திய–பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் அமைந்துள்ள சிருங்கார் காலையரங்கில்."தமிழ்நாடு நாள் விழா" 22.11.2009 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மாலை 4.00 மணிக்கு சிறப்பாக நடைபெற உள்ளது.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் இவ்விழாவினை தலைமையேற்று தொடங்கி வைக்க உள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.கம்பம் பெ.செல்வேந்திரன் அவர்கள் முன்னிலை வகிப்பார்கள்.

விழாவில் கலைக்கோயில் திருமதி.முத்தரசி ரவி குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.